# என்றோ ஒருநாள் அவர் வருவார்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

நான் அப்படியே விழுந்து என்னுடைய சிறிய பழைய அழுக்கான அங்கே இருந்த அறையில் அழ துவங்கினேன்.

267 நான் அப்படியே தூங்கி இருக்க வேண்டும். நான் தூக்கத்திலிருந்தேனோ அல்லது என்ன சம்பவித்ததோ எனக்கு தெரியாது.

268 நான் மேற்கு பக்கமாய் இருக்க எப்பொழுது வாஞ்சிப்பேன். நான் எப்பொழுதுமே அவர்களுடைய தொப்பிகளில் ஒன்றை அணிந்துகொள்ள விரும்புவேன். என்னுடைய தகப்பனார் அவருடைய வாலிப நாட்களில் குதிரைகளை அடக்குவார். நான் அவர்களுடைய தொப்பிகளில் ஒன்றை எப்பொழுதுமே அணிந்து கொள்ள விரும்பினேன். சகோதரன் டீமாஸ் ஷ்காரியன் நேற்று எனக்கு ஒன்றை வாங்கித் தந்தார். என்னிடத்தில் முதலில் (இருந்த) ஒன்று அதைப்போன்று இருந்ததில்லை. அந்தவிதமான அவர்களுடைய மேற்கத்திய தொப்பிகளில் ஒன்று.

269 நான் பரந்த புல்வெளியினூடாக தொடர்ந்து, அந்த நான்கு சக்கர பாரவண்டியில் ஒரு சக்கரம் உடைந்திருக்கிறது. பண்ணையின் மேல் அடையாளம், விற்பதற்காக' என்ற அந்த பாடலை பாடிக்கொண்டே போய்க்கொண்டு இருக்கிறதாக' நினைத்தேன். நான் தொடர்ந்து

போகையில், ஒரு பழைய மூடப்பட்ட நான்கு சக்கர பாரவண்டியை கவனித்தேன். ஒரு பழைய பரந்த உறுதியான பாத்திரம் போன்று இருந்தது. சக்கரமோ உடைந்திருந்தது. நிச்சயமாக அது என்னுடைய முறிந்துபோன குடும்பத்திற்கு பிரதிநிதித்துவமாய் இருந்தது. நான் நெருங்கி வந்தபோது, நான் நோக்கிப் பார்த்தேன். அங்கே உண்மையாகவே அழகான ஒரு ஒரு வாலிபப்பெண், சுமார் இருபத்தி மூன்று வயதிருக்கும். வெண்மையாக பறந்து கொண்டிருக்கும் தலைமுடியும், நீல கண்களும், வெண்மையான உடையும் உடுத்தி இருக்கக் கண்டேன். நான் அவளை நோக்கிப் பார்த்தேன். நான், "நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்?" என்றேன். பின்னர் கடந்து சென்றேன்.

அவள், "ஹலோ அப்பா" என்றாள்.

270 நான் அப்படியே திரும்பினேன். நான், "அப்பாவா?" என்று கேட்டேன். நான், "ஏன், குமாரி, நீ...நீ என்னைப் போன்ற வயதுடையவளாய் இருக்கும் போது, நான் எப்படி உன்னுடைய அப்பாவாக இருக்க முடியும்?" என்று கேட்டேன்.

271 அவள், "அப்பா நீர் எங்கிருக்கிறீர் என்று உமக்கு தெரியவில்லையா?" என்று கேட்டாள்.

அப்பொழுது நான், “நீ என்ன சொல்லுகிறாய்?” என்றேன்.

272 அதற்கு அவள், “இது பரலோகம்” என்றாள். “பூமியின் மேல் நான் உம்முடைய குட்டி சாரோனாக இருந்தேன்” என்றாள்.

நான், “ஏன், தேனே, நீ ஒரு சின்ன குழந்தையாய் இருந்தாயே” என்றேன்.

273 “அப்பா, சிறு குழந்தைகள் இங்கே சிறுகுழந்தைகள் அல்ல. அவர்கள் அழிவில்லாதவர்கள். அவர்களுக்கு வயதாகிப் போவதில்லை, அதாவது அவர்கள் ஒருபோதும் வளருவதில்லை” என்றாள்.

274 நான், “நல்லது, சாரோன், தேனே, நீ ஒரு அழகான வாலிப ஸ்திரீயாய் இருக்கிறாயே” என்றேன்.

அவள், “அம்மா உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறாள்” என்றாள். நான், “எங்கே?” என்று கேட்டேன்.

அவள், “உயரே உம்முடைய புதிய வீட்டிலே” என்றாள்.

275 நான், “புதிய வீட்டிலா?“ என்று கேட்டேன். பிரான்ஹாம்கள் நாடோடிகளாக

இருக்கின்றனரே. அவர்களுக்கு வீடுகளே கிடையாது. நான், “தேனே, எனக்கு வீடே இருந்ததில்லையே” என்றேன்.

276 அதற்கு அவள், “ஆனாலும் அப்பா உமக்கு இங்கே மேலே ஒன்று இருக்கிறது” என்றாள். ஒரு குழந்தையாய் இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆனால் அது அவ்வளவு உண்மையாக எனக்கு இருக்கிறது. (சகோதரன் பிரான்ஹாம், “அழுகிறார்” - ஆசி.) அதைக் குறித்து நான் சிந்திக்க துவங்குகையில் அவை அனைத்தும் மீண்டுமாய் நினைவுக்கு வருகின்றன. மேலும், “அப்பா இங்கே உமக்கு ஒன்று இருக்கிறது” என்றாள். அங்கே எனக்கு ஒன்று இருக்கிறது என்று எனக்கு தெரியும். என்றோ ஒரு நாள் அங்கு நான் செல்வேன். அவள், “பில்லிபால், என்னுடைய சகோதரன் எங்கே?” என்று கேட்டாள்.

277 அதற்கு நான், “நான் அவனை திருமதி.பிராயிடம் ஒரு சில நிமிடங்களுக்கு முன்புதான் விட்டுவிட்டு வந்தேன்” என்றேன்.

மேலும் தொடர்ந்து அவள், “அம்மா உம்மை பார்க்க விரும்புகிறாள்” என்றாள்.

278 நான் திரும்பி பார்த்தேன். அங்கே மகத்தான பெரிய அரண்மனைகள் இருந்தன. தேவனுடைய மகிமை அவைகளை சுற்றிலுமாய் இருந்தது. நான், "என் வீடு இனிமையான வீடு" என்று தூதர்களின் பாடல்குழு பாடிக்கொண்டிருக்கிறதை கேட்டேன். நீண்ட படிகளின் வழியாக வேகமாக என்னால் முடிந்த அளவுக்கு வேகமாக ஓடத்தொடங்கினேன். நான் கதவண்டை வந்தபோது அங்கே அவள் ஒரு வெண்மையான வஸ்திரம் தரித்தவளாய், அந்த கருமையான நீண்ட தலைமுடி அவளுக்குப் பின்னாக கீழே தொங்கிக் கொண்டிருக்க நின்றாள். அவள் தன்னுடைய கரங்களை உயர்த்தினாள். நான் வீட்டிற்கு வேலையிலிருந்து அல்லது வேறொரு காரியத்திலிருந்து களைப்பாய் வரும்போது அவள் வழக்கமாக செய்வதுபோல் உயர்த்தினாள். நான் அவளை கரங்களால் பற்றிப்பிடித்து, "தேனே, நான் சாரோனை கீழே பார்த்தேன்" என்றேன். நான் "அவள் ஒரு அழகான பெண்ணாய் ஆகிவிட்டாளே, அவள் அப்படியாகவில்லையா?" என்று கேட்டேன்.

279 அதற்கு அவள், "ஆம், பில்" என்றாள். அவள், "பில்" என்று கூறி அவளுடைய கரங்களை என்னைச் சுற்றி, என்னுடைய

தோள்களைச் சுற்றி போட்டுக்கொண்டு அவள் என்னை தட்டிக் கொடுக்கத் துவங்கி, (அவள் கூறினாள்) "என்னையும், சாரோனையும் குறித்து கவலைப்படுவதை நிறுத்திக்கொள்ளுங்கள்" என்றாள்.

நான், "தேனே, என்னால் அதை தவிர்க்க முடியவில்லையே" என்றேன்.

280 அவள், "நானும், சாரோனும் உம்மை விட மேன்மையாய் இருக்கிறோம். எங்களைக் குறித்து இனி கவலைப்பட வேண்டாம். எனவே, நீர் அவ்வாறு கவலைப்படமாட்டீர் என்று எனக்கு வாக்களிப்பீரா?" என்று கேட்டாள்.

281 அதற்கு நான், "ஹோப், நான் உனக்காகவும், சாரோனுக்காகவும் அவ்வளவு தனிமையாய் இருக்கிறேன். பில்லி எல்லா நேரத்திலும் உனக்காக அழுகிறான். நான், அவனோடு என்ன செய்வதென்றே எனக்கு தெரியவில்லை" என்றேன்.

282 அவள், "அதெல்லாம் சரியாகிவிடும் பில்" என்றாள். மேலும் அவள், "இனி நீர் கவலைப்பட மாட்டீர் என்று எனக்கு வாக்களியும்" என்றாள். பின்னர் அவள், "உட்காரமாட்டீரா?" என்று கேட்டாள். அப்பொழுது நான் சுற்றும்

முற்றும் பார்த்தபோது அங்கே ஒரு மகத்தான பெரிய நாற்காலி இருந்தது.

283 ஒரு நாற்காலி வாங்க நான் முயற்சித்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. இப்பொழுது முடிக்கும் போது இதை கூறுகிறேன். ஒரு சமயம் நான் ஒரு நாற்காலி வாங்க முயற்சித்தேன். எங்களிடத்தில் சாதாரண அந்த பழைய மரத்தாலான அடிபாகம் கொண்ட நாற்காலிகள்தான் காலை சிற்றுண்டிக்கு பயன்படுத்தப்படும் நாற்காலியாக இருந்தது. அவைகளைத்தான் நாங்கள் உபயோகிக்க வேண்டியதாயிருந்தது. அவைகள் மட்டும்தான் எங்களிடம் இருந்தது. பின்னாக தள்ளி சாய்ந்து கொள்ளும்படியான நாற்காலிகளில் ஒன்றை எங்களால் வாங்க முடிந்தது...அது எந்தவிதமான ஓய்வெடுக்கும் நாற்காலி என்பதை நான் மறந்துவிட்டேன். அதின் விலை பதினேழு டாலர்கள். நீங்கள் மூன்று டாலர்கள் முன்பணம் கொடுத்து வாரத்திற்கு ஒரு டாலர் கட்டலாம். நாங்கள் ஒன்றை வாங்கினோம். ஓ, நான் உள்ளே வரும்பொழுது..., நான், நான் முழுவதுமாக வேலை செய்து, நடு இரவு வரை வீதிகளைச் சுற்றியும் எங்கெல்லாம் பிரசங்கிக்கக்கூடுமோ அங்கெல்லாம் பிரசங்கித்துவிட்டு வருவேன்.

284 ஒரு நாள் என்னுடைய தவணையை செலுத்துவதில் தவறிப்போனேன். எங்களால் அதை சரியாக கட்ட முடியவில்லை. நாளுக்கு நாள் அந்த தவணைப்பணம் அதிகரித்து விட்டது. முடிவில் ஒரு நாள் அவர்கள் வந்து என்னுடைய நாற்காலியை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அந்த இரவை என்னால் ஒரு போதும் மறக்கவே முடியாது. அவள் எனக்கு செர்ரி பழத்தை சமைத்திருந்தாள். பாவம் சிறிய பழைய காரியம். நான் மனமுறிவடையப் போவதை அவள் அவள் அவள் அறிந்திருந்தாள். இரவு ஆகாரத்திற்குப் பின்னர் நான், "தேனே இன்றிரவு நீ எவ்வளவு நன்றாய் இருப்பதைக் குறித்து என்ன?" என்று கேட்டேன்.

285 அவள், "அண்டை வீட்டிலிருக்கிற பையன்களைக் கூப்பிட்டு பள்ளம் தோண்டி மீன்பிடிக்கும் புழுக்களை எடுத்து வைத்திருக்கிறேன். நாம் சிறிது நேரத்திற்கு ஆற்றுக்குப்போய் மீன்பிடித்தாக வேண்டும் என்று நீர் நினைக்கவில்லையா?" என்று கேட்டாள்.

அதற்கு நான், "ஆம், போகலாம், ஆனால்" என்றேன்.

286 அவள் அழ ஆரம்பித்துவிட்டாள். அங்கே ஏதோ காரியம் தவறாக இருந்தது என்று

எனக்கு தெரியும். எனக்கு ஒரு கருத்து இருந்தது. ஏனென்றால் அதை எடுத்துக்கொண்டு போக அவர்கள் வருவதாக ஏற்கனவே ஒரு அறிவிப்பை அனுப்பியிருந்தனர். எங்களால் அந்த வாரத்திற்கான ஒரு டாலர் தவணையை செலுத்த முடியவில்லை. எங்களால் அதை செலுத்த முடியாமற்போயிற்று. எங்களால் அதை செலுத்த முடியவில்லை. அப்பொழுது அவள் அவளுடைய கரங்களை என்னை சுற்றிப்போட்டுக் கொண்டிருக்க நான் கதவண்டை சென்றேன். என்னுடைய நாற்காலி போய்விட்டது.

அவள் அங்கே உயரே என்னிடத்தில் கூறினாள், அவள், "பில், அந்த நாற்காலி உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டாள். நான், "ஆம், தேனே, எனக்கு நினைவிருக்கிறது" என்றேன். "நீர் அதைக் குறித்துதானே நினைத்துக் கொண்டிருந்தீர் இல்லையா?" என்று கேட்டாள்.

அதற்கு நான், "ஆம்" என்றேன்.

287 அப்பொழுது அவள், "இந்த ஒன்றை அவர்கள் கொண்டு போகமாட்டார்கள். இந்த ஒன்றுக்கு கிரயம் செலுத்தப்பட்டாயிற்று" என்றாள்.

அவள், "ஒரு நிமிடம் உட்காரும், நான் உம்மிடத்தில் பேச விரும்புகிறேன்" என்றாள்.

நான், "தேனே, எனக்கு இது புரியவில்லை" என்றேன்.

288 அவள், "பில்லி, எனக்கு வாக்குக் கொடுங்கள், இதற்கு மேல் நீர் கவலைப்படமாட்டீர் என்று எனக்கு வாக்குக் கொடுங்கள், இப்பொழுது நீர் திரும்பிப் போகப்போகிறீர்" என்றாள். தொடர்ந்து, "இனி நீர் கவலைப்படமாட்டீர் என்று எனக்கு வாக்குக்கொடும்" என்றாள்.

நான், "என்னால் அதைச் செய்யமுடியாதே ஹோப்" என்றேன்.

289 சரியாக அந்த நேரத்தில் நான் என் சுயநினைவுக்கு வந்து தெளிந்தேன். அப்பொழுது அறைக்குள் இருட்டாக இருந்தது. நான் சுற்றும் முற்றும் பார்த்தேன், அவளுடைய கரம் என்னைச் சுற்றிலுமாய் இருப்பதை உணர்ந்தேன். நான், "ஹோப், நீ இந்த அறைக்குள் இருக்கிறாயா?" என்று கேட்டேன்.

290 அவள் என்னை தட்டிக்கொடுக்கத் துவங்கினாள். அவள், "பில், நீர் அதை எனக்கு வாக்களிக்கப் போகிறீரா?" என்று கேட்டாள். தொடர்ந்து அவள், "இனிமேல் நீர்

கவலைப்படமாட்டீர் என்று எனக்கு வாக்குக் கொடுங்கள்" என்றாள்.

நான், "உனக்கு வாக்கு கொடுக்கிறேன்" என்றேன்.

291 அதன்பிறகு அவள் என்னை இரண்டு அல்லது மூன்று முறைகள் தட்டிக்கொடுத்துவிட்டு போய்விட்டாள். நான் குதித்தெழுந்து விளக்கைப் போட்டேன். பின்னர் எல்லா இடத்திலும் பார்த்தேன். அவள் போய்விட்டாள். ஆனால் அவள் அறையை விட்டு போய்விட்டாள். அவள் போகவில்லை. அவள் இன்னும் ஜீவித்துக்கொண்டிருக்கிறாள். அவள் ஒரு கிறிஸ்தவளாய் இருந்தாள்.

292 சமீபத்தில் பில்லியும் நானும் கல்லறைக்கு சென்றோம். அவனுடைய தாய்க்கும், சகோதரிக்கும் பூக்களை எடுத்துக் கொண்டு ஈஸ்டர் காலையில் சென்று நாங்கள் அங்கே நின்றோம். அப்பொழுது என் சிறுபையன் அழ ஆரம்பித்துவிட்டான். அவன், "அப்பா, என் அம்மா, அங்கே கீழே இருக்கிறாள்" என்றான்.

293 நான், "இல்லை, தேனே. இல்லை. அவள் அங்கே கீழே ஒன்றும் இல்லை. சகோதரி அங்கே கீழே இல்லை, இங்கே நமக்கு மூடப்பட்ட

கல்லறைதான் இருக்கிறது. ஆனால் கடலினூடாக சென்றால் அங்கே ஒரு திறந்த கல்லறை இருக்கிறது. அங்கே இயேசு உயிர்த்தெழுந்தார். என்றோ ஒரு நாள் அவர் வருவார். அவர் சகோதரியையும், அம்மாவையும் அவரோடு கொண்டு வருவார்" என்றேன்.

294 நண்பர்களே, இன்றைக்கு நான் யுத்த களத்திலே இருக்கிறேன். என்னால் என்னால் இதற்குமேல் எதையுமே சொல்ல முடியவில்லை. நான் (சகோதரன் பிரான்ஹாம் அழுகிறார் - ஆசி.) தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஒரு நிமிடம் நாம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக.

*செய்தி:* **என் சுய சரிதை,** ஏப்ரல் 19, 1959

★★★★★